# இயல் இரண்டு

# விலங்குகள் உலகம்

**நுழையும்முன்**

காடு பறவைகள், விலங்குகள், தாவரங்கள் போன்ற பல்லுயிர்களின் வாழ்விடமாகும். காடுகளின் செழிப்புக்குக் காட்டுயிரிகள் உதவுகின்றன. மனிதனின் முதல் இருப்பிடம் காடுதான். அதன் மரபுத் தொடர்ச்சியாகத்தான் காட்டைப் பற்றியும் காட்டு விலங்குகள் பற்றியும் அறியும் ஆர்வம் மனிதர்களிடம் இன்றும் தொடர்கிறது. காட்டு விலங்குகளின் உறைவிடமான களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்துள் ஓர் உலா வருவோமா!




பள்ளியிலிருந்து வீடு திரும்பிய ஆதினி தன் அம்மாவுக்காகக் காத்திருந்தாள். பணியில் இருந்து வீடு திரும்பிய அம்மாவிடம் 'அம்மா! எனக்குக் காட்டு விலங்குகள் பற்றிய புகைப்படத் தொகுப்பு ஒன்று தயாரிக்க வேண்டி இருக்கிறது. அதற்குத் தாங்கள்தான் உதவ வேண்டும்' என்று கூறினாள். 'அப்படியா! எனக்குத் தெரிந்த வனஅலுவலர் ஒருவர் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் பணியாற்றுகிறார். அவரிடம் முன் இசைவு பெற்று நாளை நாம் அங்குச் செல்லலாம். அப்பொழுது நீ காட்டு விலங்குகளைப் புகைப்படம் எடுக்கலாம். அவற்றைப் பற்றிய தகவல்களையும் தெரிந்து கொள்ளலாம். என்ன மகிழ்ச்சிதானே!' என்றார் அம்மா.

மறுநாள் ஆதினியும் அவளது தாய் மலர்விழியும் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்திற்குச் சென்றனர். அவர்கள் இருவரையும் பாதுகாப்பு ஊர்தியில் ஏற்றிக் காட்டுக்குள் அழைத்துச் சென்றார் வனவர். அப்போது...

மலர்விழி : இந்தப் புலிகள் காப்பகம் பற்றி நாங்கள் தெரிந்து கொள்ளலாமா ஐயா?

வனவர் : இது தமிழ்நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய புலிகள் காப்பகம். இது 895 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. இங்கு புலி, சிறுத்தை, யானை, மான், கரடி, காட்டுமாடு போன்ற அரிய விலங்குகள் வாழ்கின்றன. அவற்றை எல்லாம் பார்க்கலாம்.

*(அப்போது தூரத்தில் யானைக் கூட்டம் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அதைப் பார்த்த ஆதினி 'யானை! யானை!' என்று மகிழ்ச்சியுடன் கைதட்டினாள். பின்பு அந்த யானைகளைப் புகைப்படம் எடுத்துக்கொண்டாள்.)*

ஆதினி : மாமா! யானையைப் பற்றிப் புதிய தகவல்கள் ஏதாவது சொல்லுங்களேன்?



7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 35 22/01/2025 17:36:21